**மாத்தறை பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மாத்தறை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 3,986,423 தொகை இரண்டு நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 433,333 மற்றும் மே முதல் திசெம்பர் வரையான காலப் பகுதிக்குரிய முத்திரைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய நிர்மாண வேலைச் செலவுகள் ரூபா 146,291 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காததுடன் 12 நிர்மாண | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேலைக்குரிய செலுத்த வேண்டிய நிர்மாணவேலைக் கடன்மீதி ரூபா 117,086 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) 02 வருமானத் தலைப்புக்களுக்காக முற்பெறுவனவு ரூபா 192,256 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) 2019 ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த ரூபா 65,700 தொகைக்கான 19 பலவின வைப்புக்களின் மீதி பலவின வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் படி நிலுவை வீதவரி மீதி ரூபா 9,003,871 தொகையாக காணப்பட்டதுடன் அதற்குரிய அட்டவணையின் படி மீதி ரூபா 9,298,187 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 294,316 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 92,014,759 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை திருப்பிகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 10,957,838 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,180,069 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 15,224,000 | 10,858,148 | 11,153,324 | 9,024,248 | 9,126,000 | 5,031,253 | 4,912,719 | 9,319,424 |
| ii. | வாடகை | 5,589,300 | 2,704,324 | 3,124,568 | 192,156 | 4,880,100 | 1,936,974 | 2,173,620 | 612,400 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,045,100 | 2,618,633 | 2,696,433 | 84,000 | 4,117,100 | 1,410,800 | 1,466,484 | 161,800 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 13,147,400 | 17,673,734 | 18,749,479 | 5,523,507 | 7,698,000 | 3,015,369 | 3,292,893 | 6,599,252 |
| | மொத்தம் | 37,005,400 | 33,854,839 | 35,723,804 | 14,823,911 | 25,821,200 | 11,394,396 | 11,845,716 | 16,692,876 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 9,294,946 தொகையாக காணப்பட்டதுடன், 5352 வீதவரி அலகுகள் தொடர்பாக ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 4,770,972 தொகையுடன் ரூபா 14,065,918 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,062,047 தொகையாககக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 9,003,871 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் முத்திரை கட்டணமாக ரூபா 19,129,617 தொகை பெற வேண்டியிருந்தது. | தற்போது அவற்றில் ரூபா 13,613,577 இற்கான தொகையொன்று கிடைத்துள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சுமார் 2 தொன் குப்பைகள் சேகரிக்கப்படுவதுடன் உக்காத குப்பைகளை மீள்சுழற்சிக்காக முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டமொன்று மீளாய்வாண்டு இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதே போல் சபையினால் உக்கக் கூடிய குப்பைகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளை எண்ணிக்கை தொடர்பாக பதிவு செய்வதற்கு பதிவேடொன்று காணப்படாமையால் நாளாந்த சேதனப் பசளை உற்பத்தி மற்றும் மீதி இருப்பு தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | உக்காத குப்பைகளை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மற்றும் உரத்தை பொதி செய்யும் அளவின் படி உற்பத்தி செய்யப்படும் உரத்தின் அளவு கணிக்கப்படுகின்றது என. | முறையான குப்பை முகாமைத்துவ முறைமை ஒன்று அறிமுகப்படுத்தல் மற்றும் முறைப்பிரகாரம் பதிவேடுகள் பேணிச்செல்லல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 09 திகதி கும்பல்கம பிரதேசத்தில் அமைந்துள்ள மாத்தறை பிரதேச சபை அலுவலகம் கெக்கனதுர பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது. பழைய அலுவலகம் அமைந்திருந்த கட்டிடத்தை சபைக்கு உரித்தாக்கி குத்தகை அடிப்படையில் வேறு தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அக் கட்டிடம் 02 வருட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | பிரதான செயலாளர் அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் வழக்கு அலுவல்களுக்கு தோன்றும் சட்ட வரைஞர்களின் அறிவுரை கிடைத்தவுடன் அக் கட்டிடம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டிடம் ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மாத்தறை, தல்பாவிலயில் அமைந்துள்ள இத்தபிடியவத்த எனும் காணியை துண்டுகளாக பகிர்வு செய்து அந்த காணியில் இருந்து விற்பனை செய்யப்பட்டிருந்த 91 துண்டுகளில் 26 இற்கான பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி மற்றும் உள்ளவாறான விற்பனை பெறுமதிக்கு இடையே வித்தியாசத்தின் மீது நிலுவை 1 சதவீதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் தற்போது 1 சதவீதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது எனவும். | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | நாவிமன வடக்கு மிரிஸ்வத்த காடு மற்றும் ஹபுகஸ்ஆரதெனிய எனும் காணி வீடுகள் அமைப்பதற்கு பயன்படுத்துவதற்காக துணைப் பகிர்வுக்காக தேசிய கட்டிட ஆய்வு நிலையம் மற்றும் புவிச்சரிதவியல் அளவைகள் சுரங்கங்கள் தோன்றும் பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களிலிருந்து பரிந்துரை பெறப்பட்டு அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் காணி அபிவிருத்திக்கு உரிய பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் நீர் வடிந்தோடும் பாதை தடைப்பட்டு மிகை மழை நிலைமையில் மண் மலைகள் கழுவிச் செல்லும் சுற்றாடல் சிக்கல் ஏற்பட்டிருந்தது எனவும் அதன் மூலம் அண்மையில் வசிப்போரின் வாழ்க்கைக்கு தாக்கம் ஏற்பட்டிருந்தது. | காணி துண்டுகளாக பகிர்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும், வதிவோரின் மக்கள் வாழ்க்கைக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் குறைவடைந்துள்ளது எனவும். | குறிப்பிட்ட ஒழுங்குறுத்தும் நிறுவனங்களின் அங்கீகாரத்தின் கீழ் செயற்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆண்டு முதல் 2023 ஆகஸ்ட் வரை காலப்பகுதியில் துணைப் பகிர்வு செய்து விற்பனை செய்யப்பட்ட 18 காணிகள் தொடர்பாக தற்காலிக பெறுமதி மதிப்பீட்டின் படி ஒரு சதவீத கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் பெறுமதி மதிப்பீட்டு விற்பனைப் பெறுமதி மற்றும் உள்ளவாறான விற்பனை பெறுமதி இடையே வித்தியாசத்தின் மீது அறவிடப்பட வேண்டிய ஒரு சதவீதத் தொகையை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது ஒரு சதவீத கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த நகர எல்லையினுள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 04 கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகளுக்கு இணக்கமின்றி குறிப்பிட்ட நிர்மாணவேலைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | ஒரு கட்டிடத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் மீதியான கட்டிட உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மாத்தறை கெக்கனந்துர பாதையில் பிடகொரட்டுவ, தல்பாவில, ரேந்தகெவத்த என்ற இடத்தில் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமல் வகையில் 619 சதுர மீற்றர்கள் அளவினைக் கொண்ட நான்குமாடி வர்த்தகக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் மாநாட்டிற்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 114,300 தொகை வெளித்தரப்பினர் ஒருவருக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தியிருந்தது. | தென் மாகாண பிரதான செயலாளரின் பரிந்துரை மற்றும் ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என. | தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யக்துவ குப்பை முகாமைத்துவ நிலையத்தினால் உரம் அரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ஹலர் இயந்திரத்திற்கு அண்மையில் சேதனப் | எதிர்காலத்தில் அரிக்கப்படும் உரம் உரிய கொள்திறனை நெருங்கிய பின்னர் அகற்றுவதற்கும் | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது செய்முறை பயன்படுத்தல் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | பசளை குவிக்கப்பட்ட இடத்தை மறைப்பதற்காக Aluminium Composite Panel பலகைகள் பயன்படுத்தப்பட்டு 1x1 அங்குல அளவான Box Bar இனால் சட்டகங்கள் தயாரிக்கப்பட்டு 22.28 சதுர மீற்றர் அளவான மறைப்பு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் சேதனப் பசளை களஞ்சியப்படுத்தும் இடத்தை மூடுவதற்குரிய அளவு சக்தியுடைய மற்றும் சேதனப் பசளை பண்டங்களை தாங்கக் கூடிய இயலுமை Aluminium Composite Panel பலகைகளுக்கு காணப்படவில்லை. மதிப்பீடுகள் தயாரிக்கும் போது அந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமையின் காரணத்தினால் மறைப்பு தயாரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 545,355 இற்கான தொகை ஆக்கபூர்வமாக செலவிடப்பட்டிருக்கவில்லை. | சேகரமாவதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வெளிப்பக்கமாக வளைந்துள்ள பகுதிகளை மீண்டும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | மாத்தறை பிரதேச சபைக் கட்டிடத்தின் புதிய நுழைவுப் பாதையின் சுவர் நிர்மாணிக்கும் போது வடிவமைப்புக்கள் தயாரிக்கும் போது பதப்படுத்தப்பட்ட பலகைகள் (Plywood) பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக கொடுப்பனவு செய்யும் போது தென்மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் 2022 ஆகஸ்ட் 22 திகதி ct-36 கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 1,439 இற்கான ரேட் பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த ரேட்டிற்கு பதிலாக தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2022 செப்தெம்பர் மாதம் ST-057 இன் கீழ் இரண்டாம் வகுப்பு பலகைகளை பயன்படுத்தி வடிவமைப்புக்களை தயாரிப்பதற்கு அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 3,394.50 இற்கான ரேட் பயன்படுத்தப்பட்டு 63.16 சதுர மீற்றர் வடிவமைப்புக்காக கொடுப்பனவு செய்யும் போது ஒரு சதுரமீற்றருக்கு ரூபா 1,955.50 வீதம் ரூபா 123,509 இற்கான தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விலைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பு தயாரிக்கும் விலைஅலகு பயன்படுத்தப்பட்டது என. | மிகவும் அனுகூலமான ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் மிகையாகக் காணப்பட்ட 26 பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்குகின்றேன் என. | பதவியணியில் மிகைப் பதவிகளை முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மாத்தறை பிரதேச சபையில் கடமையாற்றும் ஆரம்ப தரத்தில் 14 தொழிலாளர்களுக்கு பதவிக்குரிய குறிப்பிடப்பட்ட கடமைகள் சாட்டப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 6,271,390 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. மேலும் சேர்க்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்காக உரிய கடமைச் சாட்டுதல்கள் மேற்கொள்ளப்படாமையால் பொதுமக்கள் நலனோம்பு சுகாதார அலுவல்கள் மற்றும் பாதைப் பராமரிப்பு அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்வதற்கு முடியாமல் போவதுடன் சேர்க்ப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் இருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி 5(2) இன் படியும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | சேவையின் தேவைப்பாட்டின் படி கடமைகள் சாட்டப்பட்டுள்ளது என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |